சுருக்கம்

பத்திரிகையாளர் ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் உள்ள ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை ரூ.3000/—லிருந்து ரூ.4000/— ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

செய்தி மற்றும் சுற்றுலா (நிர்வாகம்—4)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.236 நாள்.3.10.2006

பார்வை:-

1) அரசு ஆணை (நிலை) எண்.147, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.3.4.1986
2) அரசு ஆணை (நிலை) எண்.489, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.6.11.1986
3) அரசு ஆணை (நிலை) எண்.91, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.2.3.1989
4) அரசு ஆணை (நிலை) எண்.94, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.30.3.1992
5) அரசு ஆணை (நிலை) எண்.139, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.1.8.1996
6) அரசு ஆணை (நிலை) எண்.98, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.17.4.1997
7) அரசு ஆணை (நிலை) எண்.84, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.28.4.1999
8) அரசு ஆணை (நிலை) எண்.79, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.11.4.2000
9) அரசு ஆணை (நிலை) எண்.151, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.13.7.2000
10) அரசு ஆணை (நிலை) எண்.190, செய்தி மற்றும் சுற்றுலா (செவெ)த்துறை, நாள்.29.11.2001

———

ஆணை:

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில், பத்திரிகைத் துறையில் நீண்டகாலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்டு, பணியிலிருந்து ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களின் சமூகப் பணியைக் கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க வகை செய்து மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 14.4.1986 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது மாதம் ரூ.250/— ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

2. பார்வை மூன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.250/—லிருந்து ரூ.400/— ஆக உயர்த்தப்பட்டது. பின்னர் பார்வை நான்கில் குறிப்பிட்டுள்ள அரசாணையின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.400/—லிருந்து ரூ.500/— ஆக உயர்த்தப்பட்டது. பார்வை 5—ல் குறிப்பிட்டுள்ள அரசாணைப்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.500/—லிருந்து ரூ.1000/— ஆக உயர்த்தப்பட்டது. பார்வை 7—ல் குறிப்பிட்டுள்ள

..2

அரசாணையின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.1000/–லிருந்து ரூ.1500/– ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டது. பார்வை 8–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின்படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூபாய் 1500/–லிருந்து ரூபாய் 2000/– மாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது. பார்வை 10–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.2000/–லிருந்து ரூ.3000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் செய்தி மற்றும் விளம்பரத் துறை மானிய கோரிக்கையின்போது பத்திரிகையாளர் ஓய்வூதியத் தொகை ரூ.3000/–லிருந்து ரூ.4000/– ஆக உயர்த்தப்படும் என அறிவித்ததற்கிணங்க, அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் பத்திரிகையாளர் ஓய்வூதியம் மாதந்தோறும் ரூ.3000/–லிருந்து ரூ.4000/– (ரூபாய் நான்காயிரம் மட்டும்) ஆக உயர்த்தி 1.9.2006 முதல் வழங்க ஆணையிடப்படுகிறது. இந்த உயர்வு ஏற்கனவே பத்திரிகையாளர் ஓய்வூதியமாக ரூபாய் 3000/– பெறுபவர்களுக்கும் பொருந்தும்.

4. பார்வை 6–ல் மற்றும் பார்வை 9–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்க தகுதிகள் குறித்த விதிமுறைகளும், நிபந்தனைகளும் கடைபிடிக்கப்படும்.

5. இச்செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும். “2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் – 1 திட்டத்தில் சேராதது – AH தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கும் ஓய்வூதிய சலுகை வழங்கும் திட்டம் – – 27 ஓய்வூதியங்கள் – 05 சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் (த.தொ.கு.2235 60 102 AH 2750)

6. இத்திட்டம் 1.9.2006 முதல் தொடங்கப்படுகிறது. இது புது பணி (New service) குறித்த செலவினமாகும்.

7. கூடுதல் செலவினத்திற்கான நிதி ஒதுக்கம் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான கூடுதல் நிதி ஒதுக்கம் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் சேர்ப்பதற்கு ஏதுவாக உரிய வரவு செலவு திட்ட கருத்துக்களை நிதி (செய்தி மற்றும் சுற்றுலா) துறைக்கு உரிய தருணத்தில் அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இச்செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் செய்யப்படுவதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்கிட இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

..3

**9.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.**362**/SS/2006 செய்தி மற்றும் சுற்றுலா நாள்.**28.9.2006** மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.**837**ன்படி ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர் (கணக்குகள் (ம) பணிவரவு) சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–35/9
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை–6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5/35/6.
நகல்:
நிதி (செய்தி மற்றும் சுற்றுலா)த் துறை.
நிதி (வரவு செலவு பொ–11)த்துறை.
செய்தி மற்றும் சுற்றுலா (வரவு–செலவு)த்துறை.
செய்தி–ஒலிபரப்பு அமைச்சகம், புதுதில்லி.
அனைத்துத் துறை செயலாளர்கள்.
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்.
சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை–2
தலைவர், சென்னை பத்திரிகையாளர்கள் சங்கம், சென்னை
தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கம், சென்னை.
செய்தி மற்றும் சுற்றுலா (வரவு–செலவு) (கணக்குகள்)த் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஒம்/..
பிரிவு அலுவலர்.